Registered as Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 339 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 4 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 13 (20-10-64) செவ்வாய்க்கிழமை இதழ் 251

மலிவு விற்பனை

நல்ல சந்தர்ப்பம்

புத்தம் புதிய டிசையின்:

★ பட்டு சேலைகள்

★ கோடம்பாக்கம் சேலைகள்

★ உறையூர் சேலைகள்

இன்னும் தொவு செய்ய ஏராளமான தினுசுகள் உண்டு.

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 7169

# ரஷ்யமந்திரியும், அதிகாரிகளும் பலி!

## பெல்கிரேடுக்கருகில் கோர விமான விபத்து

பெல்கிரேட், அக் 19

யூகோஸ்லேவியாவுக்கு வந்துகொண்டிருந்த ரஷ்ய விமானம் ஒன்று நொறுங்கி விழுந்ததால் அதிலிருந்த ரஷ்ய உதவிப் பாதுகாப்பு மந்திரியும் அவருடன் இருந்த மற்றும் 30 உயர்தர சோவியத் அதிகாரிகளும் மாண்டுவிட்டதாக இன்றிரவு அறிவிக்கப்பட்டது.

பெல்கிரேட் விடுதலை தினத்தின் 20-ம் ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்குபற்றும்பொருட்டு இந்த உயர் அதிகாரிகள் கோஷ்டி யூகோஸ்லேவியாவுக்கு வந்துகொண்டிருந்தது. துரதிருஷ்டவசமாக பெல்கிரேட்டுக்கருகில் அவர்கள் பிரயாணம்செய்த விமானம் நொறுங்கியது என்றும், அனைவரும் இந்த விபத்தில் மாண்டதாகவும் ஒரு செய்தி அறிவித்தது.

மாண்டுபோனதாகக் கூறப்படும் ரஷ்ய உதவி பாதுகாப்பு மந்திரி, ரஷ்ய ராணுவப் படைகளின் பிரதம தளபதியுமாவர்.

## குருஷ்சேவ் விலகவில்லை; விலக்கப்பட்டார்

### குருஷ்சேவினால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகளும் பதவி இழந்தனர்

மாஸ்கோ, அக். 19

சோவியத் யூனியனின் பிரதமர் திரு. நிகிட்டா குருஷ்சேவ் பதவியிலிருந்து விலகவில்லை, அவர் விலக்கப்பட்டார் என்று மாஸ்கோ செய்திகள் கூறுகின்றன. திரு. குருஷ்சேவ் பதவி நீக்கம்செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரினால் முன்னர் நியமிக்கப்பட்டு உயர் பதவி வகித்த சிலர் இப்பொழுது பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதேமாதிரி இன்னும் சிலர் அடுத்த வாரத்துக்குள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று மாஸ்கோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சோவியத் அரசாங்கத்தின் (மாலைப்பதிப்பு) பத்திரிகையான "இஸ்வேஸ்டியா"வின் ஆசிரியரும், திரு. குருஷ்சேவின் மருமகனுமான திரு. அலெக்ஸி அட்ஸூபெய் என்பவர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அரசாங்க வானொலி டெலிவிஷன் கமிட்டி தலைவரான திரு. மிக்கெயில் கார்லமோவும் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். "பிராவ்டா" பத்திரிகையின் ஆசிரியர் திரு. பாவெல் சற்யுகோஷம் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இவர்களையெல்லாம் திரு. குருஷ்சேவ தான் பதவியிலமர்த்தினர் என்றும் வேறு சிலர் பதவிநீக்கம் செய்யப்படவிருக்கிறார்கள் என்றும் மாஸ்கோ வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் இரகசிய கூட்டத்தில் சில குற்றச்சாட்டுகள் குறித்து திரு. குருஷ்சேவ் வாதித்துக்கொண்டிருந்தார். ஆனால் வெற்றி பெறவில்லை என்று மாஸ்கோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திரு. மிக்ஹெயில் சுஸ்லோவ் சமத்திய சில குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்தே திரு. குருஷ்சேவ் பதவியிலிருந்து நீக்கப்பட்டாரென நம்பப்படுகிறது.

## சீன அணுகுண்டு

### கதிரியக்கம் கண்டு பிடிக்கப்பட்டது

டோக்கியோ, அக் 19

சீன அணுகுண்டு வெடித்ததின் விளைவாக வடக்கு ஜப்பானில் அணுசக்தி கதிரியக்கங்கள் பரவியிருப்பதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு ஜப்பானிலுள்ள பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு சோதனையின் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. நகரில் நேற்று பெய்த மழையிலும் கதிரியக்கம் இருப்பதாக பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## "காயங்களுடன் அண்ணன் பேச்சு மூச்சின்றி கிடந்தார்"

### புலோப்பளை கொலை வழக்கில் தங்கை மரியம்மா சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

புலோப்பளை கொலைவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்றுக் காலை நீதிபதி திரு. ரூபர்ட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காலஞ்சென்றவரின் தங்கை மரியம்மா சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 64-ம் ஆண்டு செப்டம்பர் 12-ம் திகதி புலோப்பளையில் பி. எட்வட், ஆர். எலாயஸ், எஸ். சீமான் பிள்ளை, எஸ். சுபதேசு, பி. மனுவேற்பிள்ளை, எம். ஜேக்கப், ஜே. அல்பிரட் ஆகியஏழுபேர் மீது ஆசீர்வாதமென் பவரை வெட்டிக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஈ. பி. சத்துருகுலசிங்கம், திருவாளர்கள் என். நடராசா, வி. கனகசபை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளிதரப்பில் பளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரூட்றிக்கோ, வழக்கறிஞர் திரு. கே. வி. சண்முகநாதனின் உதவியுடனும், திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

காலஞ்சென்றவரின் மகள் புஷ்பராணி (வயது 12) சாட்சியமளித்தபோது கூறியதாவது. எனது தகப்பனார் வேலையால் வந்து கிராமச்சங்கக் கிணத்திற்குக் குளிக்கப் போனார். பின் சத்தம் போட்டுக் கொண்டு ஓடிவந்தார். அவரைப் பின்தொடர்ந்து கொஞ்சப்பேர் ஓடிவந்தார்கள். தகப்பனார் முற்றத்தால் வந்து வீட்டிற்குள் போகும்போது 1-ம் எதிரி வாளால் வெட்டினார், மற்ற எதிரிகள் கொட்டனால் அடித்தார்கள். நான்குளறினேன். 6-வது எதிரி இவள் சாட்சி சொல்லிப் போடுவாள் இவளையும்வெட்ட வேண்டுமென்றார். நான் பயந்து ஓடிவிட்டேன். அதன்பின் மாமாவுடன் பொலிசுக்குச் சென்றேன்.

சுவாக்கின் மனைவியும் காலஞ் சென்றவரின் தங்கையுமான மாரியம்மா சாட்சியமளித்தபோது கூறியதாவது: சம்பவம் நடந்ததினம் எனது அண்ணன் எனது வீட்டிற்கு வந்து கோழிச்சூப்பு செய்து தரும்படி கூறினார். அவரது மனைவி ஆஸ்பத்திரியிலிருந்ததால் அவர் தனது மனைவிக்கு சூப்பு தயாரிக்க சொன்னார்.

அன்றுமாலை எனது அண்ணர் கோழிச்சூப்பு எடுக்கவில்லை. மாலை 6 மணிவரை பார்த்துவிட்டு, நான் அவர் வீட்டுக்குப்போனேன்: எலியாஸும் மனுவல்பிள்ளையும், அண்ண

(6-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள போதனையை நிறுத்த

### தமிழரசுக் கட்சி முயற்சி

யாழ்ப்பாணம், செவ்.

சென்றவார இறுதியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவைத் தொடர்ந்து திரு. எஸ். ஜே. செல்வநாயகம் தலைமையில் திருவாளர்கள்: துரைரத்தினம், ஜெயக்கொடி, கதிரவேற்பிள்ளை முதலியோரைக் கொண்ட கமிட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை உடுப்பிட்டித் தொகுதிகளில் உள்ள 'டியூட்டரி' நிர்வாகத்தர்களுடன் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தியதின் பேரில் சிங்களம் கற்பிப்பதை அடுத்த மாதத்திலிருந்து நிறுத்த நிர்வாகத்தர்கள் ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

'டியூட்டரி'களில் சிங்களம் கற்பிப்பதை நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் முயற்சியில் தமிழரசுக்கட்சி இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மற்றும் தொகுதிகளிலும் இவ்வித முயற்சிமேற்கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது.

## இன்று பொது விடுமுறை

கொழும்பு, செவ்வாய்

இன்று பௌத்த பூரணையை முன்னிட்டு பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## "எல்லாக் கல்லூரிகளிலும் ஒரேமாதிரி கல்வி கிடைக்கும்"

### விஞ்ஞானகூடத் திறப்புவிழாவில் வித்தியாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"பட்டினங்களிலுள்ள கல்லூரிகளிலும், கிராமங்களிலுள்ள கல்லூரிகளிலும் ஒரே மாதிரியான கல்வி வசதி கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்திருக்கிறோம்" என கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விஞ்ஞானகூடத்தைத் திறந்துவைத்த வித்தியாதிபதி திரு. ஈ. எச். டி. அல்விஸ் பேசிய

(6-ம் பக்கம் பார்க்க)

போன்: 296 தந்தி: 'ரோகிணி'

தீபாவளி விற்பனை அழைப்பு

19-10-64 தொடக்கம் 3-11-64 வரை

S. R. S.

ஜவுளி மாளிகையில்

மங்களகரமான தீபாவளிப் பண்டிகைக்காக ஏராளமான பிடவைத்தினுசுகளை வரவழைத்திருக்கிறோம்.

தங்களுக்கு தேவையான ஜவுளித்தினுசுகளை முன்னதாகவே வந்து தெரிவு செய்யுங்கள்.

சென்ற ஆடி மாதம் மலிவு விற்பனை செய்த ஜவுளிமாளிகை

எஸ். ஆர். செல்லத்துரை

(கதிரேசன் கோவிலுக்கும் மிட்டாஸ் கடை சந்திக்கும் இடையில் உள்ளது)

216, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

[illegible]வாக்கு

கார்ல்மார்க்ஸ் நமது தமிழகத்தில் தோன்றியிருந்தாரானல் மார்க்ஸயத்துக்கும் நமக்கும் சிறிதளவு வேறுபாடும் இருந்திருக்காது. அந்த அளவுக்கு நமது ஶசவசமயம் உயிருண்மை, உயிர்களின் உரிமை ஆகியனபற்றிப் பேசுகிறது.

— குன்றக்குடி அடிகளார்


ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஐப்பசி ௴ 4 உ (20-10-64)


## உலகின் மூன்று பெரும் நிகழ்ச்சிகள்

கெடுபிடியுத்த சூழ்நிலை மறைந்து உலக சமாதானத்துக்கான நம்பிக்கை ஒளி தோன்றிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் சென்றவார இறுதியில் உலகில் நிகழ்ந்துள்ள முக்கிய சில சம்சவங்கள் சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு கவலையளிப்பதாகும்.

உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் கெடுபிடி யுத்தத்தைத் தவிர்க்கவும் அயராதுழைத்த பண்டித ஜவஹர்லால்நேருவும், ஜோன் எவ். கென்னடியும் மறைந்தபின் உலகம் நம்பியிருந்த திரு. நிகிட்டா குருஷ்சேவும் சென்றவாரம் சோவியத் பிரதமர் பதவியிலிருந்தும் தலைமைப் பீடத்திலிருந்தும் நீக்கப்பட்டுவிட்டார். பூரண படைகுறைப்புக்கு முதற்படியாக ஓரளவு அணு ஆயுத தடைஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்தவும் அணு ஆயுதங்களை ஒழிக்கவும் வேண்டிய அவசியத்தை கெய்ரோவில் சென்றவாரம் முடிவடைந்த நடுநிலைமை நாடுகள் ஒரு பிரகடனம் மூலம் வேண்டுகோள் விடுத்த சிலதினங்களுக்குள்ளேயே நவசீனு தனது முதலாவது அணுஆயுதத்தைப் பரிசீலனை செய்து தானும் ஒரு அணுவல்லரசு என்பதை உலகுக்கு உணர்த்தியுள்ளது. இதேசமயம் பிரிட்டனில் மிகக் குறைந்த பெரும்பான்மைப் பலத்துடன் தொழிற்கட்ர ஆட்சிக்கு வந்துள்ளது. இந்நிகழ்ச்சிகள் உலகின் போக்கில் பல மாறுதல்களைச் செய்யக் கூடுமென எதிர்பார்க்கலாம்.

சோவியத் யூனியனில் பிரதமர் பதவியை திரு. குருஷ்சேவ் தாமாகவே துறந்ததாக முன்னர் செய்தி வெளிவந்ததெனினும் பிரதமர் பதவியிலிருந்துமட்டுமல்லாது, கட்சியின் முதலாவது காரியதரிசிப்பதவியிலிருந்தும் சோவியத் பார்லிமெண்ட் அங்கத்தவர் பதவியிலிருந்தும் அகற்றப்பட்டார் என்று இப்பொழுது கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. குருஷ்சேவ் தமது ஆட்சிக்காலத்தில் முக்கிய பதவிகளில் நியமித்தவர்கள்கூட அப்பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இக்களையெடுப்பு நடவடிக்கை தொடர்ந்து நடைபெறக் கூடும்.

## "முக்கிய கடமை"

பொல்காவலை, திங்கள்

"தங்களுக்குள்ளே சிறு மனவேற்றுமைகளை பொருட்படுத்தாது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்லகல்வி ஊட்டப் பார்க்க வேண்டும். அதுவே அவர்களின் முக்கிய கடமையாயிருத்தல் வேண்டும்" என்று கல்வி அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லே தேவாலகம மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் [illegible]பொழுது குறிப்பிட்டார்.

குருஷ்சேவ் பதவிநீக்கத்துக்கு சோவியத்-சீன கருத்து வேற்றுமைதான் முக்கிய காரணமென்று இப்பொழுது அறியப்படுகிறது. குருஷ்சேவின் பதவிநீக்கம் சீன-சோவியத் உறவில் மாற்றம் ஏற்படுத்துவதுடன் சோவியத் யூனியன் சமீபகாலமாகக் கடைப்பிடித்து வந்த உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும்.

நவசீனுவும் அணுவல்லரசாகிவிட்டது. படைகுறைப்பு நடவடிக்கை எதிலும் இனி சீனுவையும் சேர்த்துக் கொண்டுதானாக வேண்டும். படைகுறைப்பு சம்பந்தமாக ஐ. நா. ஸ்தாபனம் எந்த நடவடிக்கை எடுத்தாலும் இப்பொழுதுள்ள நிலையில் அது சீனுவைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே ஐ. நா.வில் சீனுவுக்கு அங்கத்துவமளிக்க வேண்டியது அவசியம், முன்னைப்பொழுதையும்விட இப்பொழுது அதிகரித்துள்ளது. ஐ. நா.வின் சீனுவுக்கு இடமளிக்க வேண்டிய விஷயத்திலும் சீனுவுடன் ராஜிய உறவைப் பலப்படுத்த வேண்டிய விஷயத்திலும் பிரிட்டனில் ஆட்சிக்கு வந்துள்ள தொழிற்கட்சி தாராள மனப்பான்மை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. குருஷ்சேவ் பதவிநீக்கமும், சீன அணுஆயுத உற்பத்தியும் எதிர்வரும் அமெரிக்க அதிபர் தேர்தலிலும் பிரதிபலிக்கக் கூடும். சீனு அணுகுண்டு தயாரித்துள்ளதன் விளைவாக இந்தியாவின் கொள்கையிலும் மாற்றம் ஏற்படக் கூடுமா என்பது இனித்தான் தெரியும். இந்தியாவும் அணுசக்தி சம்பந்தமான தனது கொள்கையைக் கைவிட்டு அணு ஆயுதம் தயாரிப்பதாளுல் உலக அழிவைத் தடுக்க முடியாது போய்விடலாம்.

உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் கெடுபிடியுத்தத்தின்மூலம் மனிதகுலத்தை அழிவிலிருந்து தடுக்கவும் சீனு சம்பந்தமாக மேற்கத்திய வல்லரசுகள் இதுவரை கடைப்பிடித்துவந்த கொள்கையை நிச்சயம் மாற்றியேயாக வேண்டும். இனியும் சீனுவை அலட்சியம் செய்வது நிச்சயம் பயங்கர விளைவுகளுக்கு வழிவகுப்பதாகும். சீனுவை வழிக்குக் கொண்டுவர வேண்டுமானுல் அதை ஐ. நா. வில், ஒரு அங்கத்துவ நாடாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நேருவின் தீர்க்கதரிசனம் இன்று நிதர்சனமாகிவிட்டது. இனியும் காலதாமதம் செய்யாது சீனுவை ஐ. நா.வில் சேர்க்க உலகநாடுகள் ஒருமனதாக முன்வர வேண்டும். இதையேதான் சென்ற வார சம்பவங்கள் வலியுறுத்துகின்றன.

இலங்கை – இந்தியர் பிரச்னை

# பூர்வாங்க பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகின்றன

## பிரதமர் வியாழனன்று டில்லி செல்வார்

கொழும்பு, ஞாயிறு

அக்டோபர் மாதம் 23-ந் திகதி புதுடில்லியில் நடைபெறவிருக்கும் இலங்கை – இந்திய பிரச்னை பற்றி ஆராய்வதற்காக இங்கிருந்து புறப்படும் தூதுக்குழுவில் உள்நாட்டு, வெளிநாட்டு, வர்த்தகமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தினவும் ஒருவராக சேர்க்கப்பட்டுள்ளார். திரு. இலங்கரத்தினவும்அவரது அந்தரங்கக் காரியதரிசியும் இங்கிருந்து அக்டோபர்மாதம் 21-ந் திகதி புதுடில்லிக்குப் புறப்படுவார்கள்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்தப்பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்காக லண்டனிலிருந்து புறப்பட்டு புதுடில்லிக்கு அக்டோபர் 22-ம் திகதி வந்துசேருவார்.

வெளி விவாகர நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ், உள்நாட்டு வெளிநாட்டு குடியேற்ற அதிகாரி திரு. டபிள்யூ. ரி ஜெயசிங்கா, உள்நாட்டு வெளிநாட்டு உதவிக் காரியதரிசி முதலியோர் இங்கிருந்து நாளை புறப்படுவார்கள். திரு டயஸ், இந்திய உத்தியோகத்தர்களான திருவாளர்கள் சி.எஸ்.ஜா,என்.பி அலக்ஸ்சாண்டர்முதலியோருடன் முதலில் பூர்வாங்கபேச்சுவார்த்தைகளை நடத்துவார்என்றுதெரியவருகின்றது. எதிர்கட்சித்தலைவர் திரு.டட்லி சேனநாயக்கா,தான் இப்பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்ற முடியாதென்று கூறியதன் காரணத்தால், இலங்கை அரசாங்கத்தினர் திரு. டட்லி சேனநாயக்காவை அனுப்பவில்லை.

# தீவுப் பகுதியிலிருந்து மாடுகளை கடத்தும் கோஷ்டி

## அராலியில் பிடிபட்டது

யாழ்ப்பாணம், செவ்.

வேலணை சரவணை முதலிய பகுதிகளிலிருந்து மாடுகளை பிடித்து தோணிகள் மூலம் கடத்தி அராலித்துறையில் கொண்டுவந்து இறைச்சிக்கு விற்பதில் சிலர் ஈடுபட்டுவருவது கண்டுபிடிக்கப்பட்டுளளது.

தீவுப் பகுதியிலிருந்து மாடுகள் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக அராலி தெற்குகிராமசேவையாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் அவர் நேற்று முன்தினம் நாலு மாடுகளையும் 3 நபர்களையும் சந்தேகத்தின் மீது கைது செய்தார்.

கைதுசெய்யப்பட்ட வயிரவன் வைத்தியன், அப்துல் மஜித், பரூக், அப்துல் காதர் முபராக் ஆகிய மூவரும் இன்று சங்கானைப் பொலிஸினுல் மல்லாகம் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸார் விசாரணை நடத்திவருவதாகவும் தெரியவருகின்றது.

## "எங்கும் இவர் புகழ் பரவியது"

### மறைந்த தலைவருக்கு சிலாபம் எம். பி. அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்வாய்

நீண்டகாலமாக அனலைதீவுக் கிராமசபைத் தலைவராகக் கடமையாற்றியதிரு.மு. பொன்னையா சென்ற வியாழக்கிழமை காலமானுர்.சிலநாட்களாகச்சுகவீனமுற்றிருந்த இவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்.

அன்னுரது பூதவுடல் அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, வெள்ளிக்கிழமை மாலை அனலைதீவு கிராமசபை மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. கிராமசபை உறுப்பினர்களும், அவ்வூர்ப் பிரமுகர்களும் அன்னுரது சமூக சேவை குறித்து அங்கு நடைபெற்ற அனுதாபக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றி வருத்தம் தெரிவித்தனர். ஏராளமான பொது மக்கள், மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தினுர்கள். சிலாபம் எம். பி. திரு எஸ். டி. ஜெயரத்தின அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில், இவரது புகழ் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கை பூராவுமே பரவியிருப்பதாகவும், இவர் தனது நண்பராகவும், புத்தி சொல்லிக் கொடுக்கும் குருவாகவும் இருந்தாரெனவும் குறிப்பிட்டார்.

அன்னுரின் பூதவுடல் மாலை 5-30 மணியளவில் அனலைதீவு மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துத்துச் செல்லப்பட்டது.

## சைவ மாமன்றம் எஸ். ஜே. வி.க்கு மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

கைக்குழத்தெரு சி. சி. பெண் பாடசாலையை அரசாங்கம் மூடவிடாது தடுத்துநிறுத்தும்படியும் அந்தப் பாடசாலை மூடப்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் வட இலங்கைச் சைவஇளைஞர் மாமன்றத்தினர் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு அனுப்பிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்கள்.

அந்தக் கடிதத்தில் மாமன்றத்தினர் தெரிவித்துள்ளதாவது:

"அரசாங்கத்தின் கொள்கைப்படி இனிமேல் புதிய பாடசாலைகளை நிறுவ முடியாது. வளர்ந்து வரும் எமது சமூகத்துக்குத் தேவையான பாடசாலைகளை மூடி காணிச் சொந்தக்காரருக்கு ஆக்கும் முயற்சியில் எவரும் மறைமுகமாக நிற்பது நீதியாகாது. பாடசாலைகளுக்கு மூடுவிழா நடத்துவதில் நல்லூர்த் தொகுதி முன்னணியில் நிற்கின்றது என்பது பகிரங்க இரகசியம். கோப்பாய் ஆசிரிய கலாசாலையை அரசாங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

1948-க்கு முன் இலங்கை, இந்தியா, மலாயா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த போது, பிரிட்டனில் நடக்கும் தேர்தல்களை மிகவும் ஆவலோடு கவனிப்போம். எந்தக் கட்சி ஆட்சி பீடத்துக்கு வரப்போகிறது, யார் பிரதமராய் வரப் போகிறர், குடியேற்ற நாட்டு மந்திரி யாராயிருக்கலாம், அவரால் எமது சுதந்திர தாகம் தீருமா என்றெல்லாம் அங்கலாய்ப்போம்.

இன்று அந்த நிலை மாறிவிட்டபடியால் பிரிட்டிஷ் தேர்தல்களில் எமக்கு அவ்வளவு அக்கறை கிடையாது. ஆயினும் பொதுநல நாடுகளின் அச்சாணி என்ற முறையிலும், எமது ஏற்றுமதிகளின் பெரும் பகுதியை வாங்கும் நாடு என்ற முறையிலும் இலங்கைக்கும் பிரிட்டனுக்குமிடையே இன்னும் நெருங்கிய தொடர்புகள் இருந்து வருகின்றன.

சென்ற வாரம் பிரிட்டனில் தொழிற் கட்சி அரசாங்கம் பதவியேற்றிருக்கிறது. அக்கட்சியின் தலைவரான ஜேம்ஸ் ஹரோல்ட் வில்ஸன் புதிய பிரதமராகியிருக்கிறர். இவர் ஒரு மர்மமான பேர்வழி என்று கூறுகிறர்கள். இவருக்கு வெகுசிலர் தான் நண்பர்களாம். ஆனுல் அவர்களுக்கும் வில்ஸனை முற்ருகப் புரிந்து கொள்ள முடிவதில்லையாம்.

ஹரொல்ட் வில்ஸன் விளம்பரப் பிரியரல்ல, கூட்டங்கள், விருந்துகளை அவர் கூடியவரை விலக்கிக் கொள்வார். ஒரு பிரபு அவரை விருந்துக்கு அழைத்தால் வில்ஸன் அதையிட்டு பெருமைப் படமாட்டார். விருந்துக்குப் போவதால் அரசியல் ரீதியில் தமக்கு ஏதாவது லாபம் கிடைக்குமா என்றுதான் யோசிப்பாராம்.

வில்ஸனின் ஆற்றலைப் பற்றி எவருக்கும் சந்தேகம் கிடையாது. கத்தி முனை போன்ற மூளை, அபாரமான ஞாபக சக்தி, புள்ளி விபரங்களை கிரகித்துக் கொள்ளும் வல்லமை எல்லாம் அவரிடம் பூரணமாக நிறைந்திருக்கிறது. 21-வது வயதிலேயே ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் அரசியல், பொருளாதாரம், வேதாந்தம் ஆகியவற்றில் முதல் வகுப்பு 'ஹானர்ஸ்' தேர்ச்சி பெற்றவர். 31-வது வயதில் அட்லி பிரபுவின் தொழிற்கட்சி அரசாங்கத்தில் மந்திரியாக கடமையாற்றியவர். 48 வயதான வில்ஸன் இந்த 20-ம் நூற்றுண்டு பிரிட்டிஷ பிரதம மந்திரிகள் எல்லோரிலும் ஆக வயது குறைந்தவர்.

⁂ ⁂ ⁂

உலக வல்லரசுகளின் மூன்றின் தலைமைப்பீடம் வருகிற நவம்பர் மாதத்தோடு மாறுதலடைகிறது. ஏற்கனவே ரஷ்யாவிலும் பிரிட்டனிலும் புதிய தலைவர்கள் தோன்றிவிட்டார்கள். அமெரிக்காவில் நவம்பர் மாதம் பொதுத் தேர்தல் நடக்கவிருக்கிறது. ஜனுதிபதி ஜோன்ஸன் வெற்றி பெற்றுலும், போன நவம்பர் மாதம் பதவியேற்றவரை புதிய தலைவர் என்றுதான் கூற வேண்டும். உலகத்தின் எதிர்காலம் இம்மூவரின் கைகளில் பெரிதளவு தங்கியிருக்கிறது என்று கூறுவது மிகையாகாது.

அரசியல் வானத்தில் பளிச்சிட்டுக்கொண்டிருந்த மொட்டந்தலைகள் ஒவ்வொன்ருக மறைந்துவிட்டனவே என்று கேலிச்சித்திரக்காரர் ஒருவர் பிரலாபித்துக் கொள்ளுகிறர். கடைசியாக இந்த ஒரு 'வழுக்கலும்' குருஷ்சேவுடன் மறைந்துவிட்டது! அரசியல் கேலிச்சித்திரம் வரைபவர்களுக்கு மொட்டந்தலை என்ருல் குதூகலத்துக்கு குறைவில்லை.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

'கிராப்' வைத்த தலைகளைக் காட்டிலும் 'வழுக்கல்'களை வரைவதில் அவர்களுக்கு அளவற்ற ஆனந்தம். சேர்ச்சிலும், காந்தியும், சியாங்கைஷேக்கும் அவர்களுக்கு மனப்பாடம். கண்ணை மூடிக்கொண்டே அந்த மண்டை ஓடுகளை வரைந்துவிடுவார்கள், ஆனுல் இன்று அவர்கள் எல்லோரும் மறைந்துவிட்டார்கள் - கேலிச் சித்திரங்களிலிருந்து.

மொட்டந்தலை வரைவது சுலபம் என்று நினைக்கிறீர்கள்? ஒருபோதுமில்லை. மண்டை வளயத்தின் நெளிவு, சுளிவு, மேடு, பள்ளம் எல்லாம் அணுப் பிசகாமல் இருக்க வேண்டும். இம்மியளவு கூடினுலும் குறைந்தாலும் சித்திரம் அசலைப்போல வராது.

உலக அரசியலில் இப்போதைக்கு மொட்டந்தலை வர மாட்டாதுபோலத் தெரிகிறது. கோஸிஜின், வில்ஸன், ஜோன்ஸன், கோல்ட்வாட்டர், மா-ஓ, சாஸ்திரி, நாஸர் எல்லோருமே 'தலைப்பாரம்' உள்ளவர்கள் - அதாவது தலையுச்சியில் பகசம் உள்ளவர்கள்.

— "வழிப்போக்கன்"

# சகலவகையான அணுகுண்டு சோதனைகளும் தடை செய்யப்பட வேண்டும்

## ரஷ்ய தலைமைப்பீடம் கருத்து

### சமாதான சகவாழ்வில் அதிக நம்பிக்கை

மாஸ்கோ, அக். 19

சகலவகையான அணுகுண்டு சோதனைகளையும் தடைசெய்ய வேண்டும் என்று சோவியத் யூனியனின் புதிய தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

சமாதானமான முறையில் மற்றைய நாடுகளுடன் ஒத்துழைத்து நட்புறவை வளர்க்க வேண்டும் என்றும் புதிய தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கம்யூனிஸ்ட் நாடுகளிடையே நிலவும கருத்துவேறுபாடுகள் களைந்தெறியப் பட்டு கம்யூனிஸ்ட் நாடுகள் ஒன்றாக வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

சமாதானசகவாழ்வுக் கொள்கையில் சோவியத் யூனியன் புதிய தலைவர்கள் மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**கியூபா ஜனாதிபதி நம்பிக்கை**

கியூபா ஜனாதிபதி ரஷ்யாவுக்குவிஜயம்செய்திருந்ததைத் தொடர்ந்து நேற்று கூட்டறிக்கையொன்று வெளியிடப் பட்டது. சமாதான சகவாழ்வுக் கொள்கையில் கியூபாவுக்கும் ரஷ்யாவுக்கும் இருக்கும் அதிக நம்பிக்கையை இக்கூட்டறிக்கை வலியுறுத்தியுள்ளது.

---

அணு ஆயுத பரீட்சை தடை

## மாஸ்கோ ஒப்பந்தத்தில் சீனு கையெழுத்திட வேண்டும்

### ஜனாதிபதி ஜோன்ஸன் கோரிக்கை

வாஷிங்டன், அக். 19

அணுகுண்டை வெடித்ததை குறித்து சீன பக்கம் சார்பான ஒருசில நாடுகள் பாராட்டுத் தெரிவித்துள்ளபோதிலும் உலகின் பலநாடுகளும் சீனுவின் இந்த முயற்சியை பலமாகக் கண்டித்துள்ளன.

அணுகுண்டை வெடித்ததன்மூலம் சீனு, தனது கௌரவத்தை குறைத்துவிட்டது என்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க் தெரிவித்துள்ளார்.

"அணு ஆயுதங்களை ஒழித்து உலகில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் மாஸ்கோ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் மாஸ்கோ அணுஆயுதப் பரீட்சைத்தடை ஒப்பந்தத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் உலகின் ஒரேநாடான சீனு தடையாக வந்துவிட்டது. இதன்மூலம் உலகமக்களின் தீராத பழிச்சொல்லுக்கு சீனு ஆளாகிவிட்டது" என்றும் திரு. டீன்ரஸ்க் தெரிவித்துள்ளார்.

**'சீனுவும் கையெழுத்திட வேண்டும்'**

நேற்று வாஷிங்டனில், அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் ஜோன்ஸன் டெலிவிஷனுக்கு அளித்தவொரு பேட்டியில் மாஸ்கோவில் கையெழுத்திடப்பட்ட 'ஓரளவு அணு ஆயுத பரீட்சைத்தடை உடன்படிக்கை'யில் கம்யூனிஸ்ட் சீனுவும் கையெழுத்திட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

"அணு ஆயுத பரீட்சைகளை நடத்துவதன்மூலம் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது. ஆனால் சீனுவின் புதிய முயற்சி இதற்குத் தடையாக நிற்கிறது. அணுஆயுதங்களைக் கொண்டு எந்த நாட்டையும் பயமுறுத்தும் நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும். அதனுடன் பயமுறுத்தப்பட்ட நாட்டுக்கு போதியளவு உதவிகளையும் அமெரிக்கா அளிக்கும்" என்றும் அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

---

திருவனந்தபுரத்தில்

## பேய் மழைக்கு 6 பேர் பலி

### 100 வீடுகள் தரைமட்டம்; 7,000 பேர் வீடிழந்தனர்

#### 56 வருடத்துக்குப்பின் நிகழ்ந்த சம்பவம்

திருவனந்தபுரம், அக் 19

திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினமிரவு பெய்த கடும்மழை காரணமாக 6 பேர் மாண்டனர் என்றும் 7,000 பேர் வீடிழந்தனர் என்றும் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு சுமார் 10-30க்குஆரம்பித்த மழை, அடுத்த நாட்காலை 8-30 வரை தொடர்ந்து கடுமையாகப் பெய்திருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. 16 அங்குல மழை பெய்திருப்பதாக இன்று கூறப்பட்டது. இப்படியான கடும்மழை 56 வருடங்களுக்குப் பின்னர் இப்பொழுது தான் ஏற்பட்டிருப்பதாக வானிலை ஆராய்ச்சிப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

கடும் மழை காரணமாக 100வீடுகள் தரைமட்டமாகின. இரண்டு பாலங்கள் இடிந்து விழுந்தன. ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்து கிடக்கின்றன.

மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள்வழங்கசேரள அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

---

### கோஸிஜினுக்கு ஜோன்ஸன் வாழ்த்து

மாஸ்கோ, அக். 18

ரஷ்யப்பிரதமர் திரு. கோஸிஜினுக்கு அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் வாழ்த்துச்செய்தி அனுப்பியுள்ளார். இரு நாடுகளும் சமாதான பாதையில் தொடர்ந்து செல்லும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

---

### 13 பேர் பலி

லண்டன், அக். 19

தெற்கு சுமாத்திராவில் நேற்று ஏற்பட்ட விமான விபத்து காரணமாக 13 பேர் உயிரிழந்தனர்.

---

### சீனு மீண்டும் அணுகுண்டு வெடிக்கும்?

லண்டன், அக். 19

கடந்த வெள்ளிக்கிழமை முதலாவது அணுகுண்டை வெடித்த கம்யூனிஸ்ட்சீனு விரைவில் மற்றுமொரு அணுகுண்டை வெடிக்கலாமென்று ஊர்ஜிதப் படுத்தப்படாத சிலசெய்திகள் கூறுகின்றன. முதலாவது சீன அணுகுண்டு சிக்கியாங் மாகாணத்தில் வெடிக்கப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

---

### சீனுவுக்கு எதிர்ப்பு டோக்கியோவில் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, அக். 19

கம்யூனிஸ்ட் சீனு அணுகுண்டை வெடித்ததை ஆட்சேபித்து, நேற்று டோக்கியோவிலுள்ள சீன வர்த்தகஸ்தாபனங்களின் முன்பு டோக்கியோ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதுசம்பந்தமாக ஏழு மாணவர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

---

### சீன அணுகுண்டு கதிரியக்க தூசுகளை ஜப்பான் பரீட்சிக்கிறது

டோக்கியோ, அக். 19

ஜப்பானிய விமானப் படையைச் சேர்ந்த சில விமானங்கள், சீன அணுகுண்டு வெடிக்கப்பட்டதினால் ஏற்பட்ட விளைவுகளைச் சோதனை செய்வதில் ஈடுபட்டுள்ளன. கதிரியக்கத் துகள்கள் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்தப் படும் என்றும் மழை நீரும் சேகரிக்கப்படுகிறது என்றும் ஜப்பான் செய்தியொன்று கூறுகிறது.

---

### ஜோன்ஸன்–வில்ஸன் விரைவில் சந்திப்பர்

லண்டன், அக். 19

அமெரிக்க ஜனாதிபதிஜோன்ஸனும் பிரிட்டிஷ் புதிய பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸனும் விரைவில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தவிருக்கிறார்கள்.

---

### ராதாகிருஷ்ணனை பாப்பரசர் சந்திப்பார்

பம்பாய், அக். 19

டிசம்பர் மாதம் 3-ம் திகதி இங்கு வரும் பரிசுத்த பாப்பரசர் போல், புதுடில்லிக்குச் சென்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்திக்கலாம் என்று அறிவிக்கப்படுள்ளது

---

### பாகிஸ்தானில் துருக்கி மந்திரி

ராவல்பிண்டி, அக். 12

நான்குநாள் விஜயம்செய்யும் பொருட்டு துருக்கி வெளிநாட்டுமந்திரி இன்று பாகிஸ்தான் வந்து சேர்ந்தார்.

---

### அமெரிக்க-பிரிட்டிஷ் உறவு

வாஷிங்டன், அக். 19

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட்வில்ஸனுக்கு அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாகச்சேர்ந்து சமாதானத்துக்குப் பாடுபடும் என்று ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

---

கி. பாகிஸ்தானில

## 6,000 தொழிலாளர் வேலை நீக்கம்

### வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது காரணம்

டாக்கா, அக். 19

கடந்த சில நாட்களாக வேலைநிறுத்தம் செய்த சுமார் 6000 பஞ்சு ஆலைத் தொழிலாளர்கள் நேற்று வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று உத்தியோகபூர்வமற்ற முறையில அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள நான்கு பஞ்சு ஆலைத் தொழிலாளர்களும் கடந்த சில நாட்களாக வேலைநிறுத்தம் செய்து வந்தனர். பஞ்சு ஆலைகளில் நிலவும் சீர்கேடுகள் நீக்கப் பட்டு திறமையான சேவை நடைபெறவேண்டும் என்று கோரி இவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படாமல், வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்பட்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட 6000 தொழிலாளர்களும் வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற செய்தி ஒன்று கூறுகின்றது.

**வேலைநிறுத்தம் நீடிக்கிறது**

இதற்கிடையில் கடந்த ஏழு நாட்களாக வேலைநிறுத்தம் செய்யும் சணல் ஆலைத் தொழிலாளர்கள் தொடர்ந்து தங்களது நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

---

கல்வி வெள்ளையறிக்கை

## நாட்டில் பரிசீலனை செய்தபின்பே பார்லிமெண்டில் விவாதிக்க வேண்டும்

### உடுப்பிட்டி எம்.பி யோசனை

பருத்தித்துறை, திங்கள்

"எதிர்காலத்தில் எமது கல்வி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது பற்றி இந்த ஆண்டில் முடிவு தெரியலாம் என நம்ப இடம் உண்டு. வெள்ளை அறிக்கையால் இது தெளிவாகும். ஆனால் அந்த வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுமுன்னர் நாட்டில் விவாதிக்கப்படவேண்டும் அரசியல் வாதிகள் முடிவு செய்யுமுன் கல்வி அறிஞர்கள், அதிபர்கள் நிபுணர்கள், பரிசீலனை செய்துதரும் முடிவையே அரசியல் வாதிகள் ஏற்கவேண்டும். கல்வியில் அரசியல் தலையீடு இருப்பதே தவறு. அரசியல் தலையீடு காரணமாகச் செய்யப்படும் முடிவு எதிர்காலத்துக்கு நல்லதும் பயனுள்ளதுமாக அமைய முடியாது."

இவ்வாறு உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் பேசுகையில் கூறினார்.

வித்தியாதிபதி திரு. ஈ. எச். டி. அல்விஸ் விழாவிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில், "அரசாங்கம் பொறுப்பேற்றால் பாடசாலைகளின் நிலை எப்படியாகும் என அஞ்சியவர்கள் இன்று கல்வியின் தரம் குறைந்துவருவதாகக் கூறுகின்றனர், இதில் உண்மை இல்லை, கல்வியின் தரம் கூடிவருவதுடன ஒரு இடத்துக்கு மாத்திரம் சொந்தாக இராமல், ஆசிரியர்களின் திறமை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. தனி ஒருவரின் மேற்பார்வையில் இருந்த பாடசாலை பெற்றோர், பரிசோதகர்கள் முதலான பலரது கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

திருமதி அல்விஸ் பரிசில்களை வழங்கியதைத் தொடர்ந்து மாணவிகளது கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

---

### அமெரிக்காவுக்கு 29 தங்கப் பதக்கங்கள்

டோக்கியோ, அக். 19

டோக்கியோ ஒலிம்பிக் விழாவில், அமெரிக்காவுக்கு நேற்று வரை 29 தங்கப் பதக்கங்கள் கிடைத்திருக்கின்றன. சோவியத் யூனியனுக்கு 13 தங்கப் பதக்கங்களும, ஹங்கேரி, அவுஸ்திரேலியாவுக்கு தலா 5 தங்கப் பதக்கங்களும் கிடைத்துள்ளன. பிரிட்டன் 3 தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளது.

---

### டிமிக்கி கொடுத்தால் கடும் நடவடிக்கை

பங்களூர், அக். 19

வரிக்கட்டணம் செலுத்தாமல் 'டிமிக்கி' கொடுத்து வருபவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமென்று நிதி மந்திரி திரு. டி. டி கிருஷ்ணமாச்சாரி இங்கு தெரிவித்துள்ளார்.

வரிப்பணம் செலுத்தாமல் அதிகமானவர்கள் ஒளிந்து இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் பட்டினங்களில்தான் உள்ளனர். அரசாங்கத்தை ஏமாற்றுபவர்கள் அதிக தண்டனை அனுபவிக்கநேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

---

### அதிக மாற்றங்கள்

லண்டன், அக். 19

பிரிட்டிஷ் மந்திரி சபையில் பல மாற்றங்கள் நிகழவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

---

### இந்திய-இலங்கை கிரிக்கெட் டெஸ்ட்

#### டிசம்பரில் ஆரம்பம்

பங்களூர், அக். 19

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே மூன்று நாள் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கிறது. முதல் கிரிக்கெட் டெஸ்ட் பங்களூரில் டிசம்பர் மாதம் 11-ம் திகதி நடைபெறும். மற்றைய இரண்டு கிரிக்கெட் டெஸ்டுகளும் ஹைதராபாத்திலும் ஆமதாபாத்திலும் நடைபெறும்.

---

### விரிவுரையாளர் கைது!

லண்டன், அக். 19

பிரிட்டிஷ் விரிவுரையாளர் விக்டர் அலென் நைஜீரிய பொலிசார் நேற்றுக் கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

நைஜீரிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப் பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். நேற்று இவர், எல்லையைக்கடக்கமுயற்சிக்கையில் கைதானார்.



# மாணவர் மலர்



## ரஷ்ய அனுபவம்

— எஸ். யோகரத்தினம் —

பாடசாலை மாணவர்களுக்கு குளிர்காலத்தில் இருவார விடுமுறையும் கோடைகாலத்தில் 3 மாத விடுமுறையும் கொடுக்கப்படுகின்றது. விடுமுறை காலங்களில் ஆசிரியர்கள் மாணவர்களை நாட்டின் வெவ்வேறு பாகங்களுக்கும் அழைத்துச் செல்வார்கள். நீச்சல் போன்ற விளையாட்டுகள் கற்றுக் கொடுப்பார்கள். எல்லாப் பாடசாலைகளிலும் சினிமாப் படங்கள் காண்பிக்கப்படும். பிள்ளைகளுக்கு விளையாட்டுகளில் போதிய பயிற்சி அளிக்கப்படுகிறது. பாடசாலைகளைத் தவிர பல தொழில்நுட்பப் பாடசாலைகளும் வித்தியாசாலைகளும், பலகலைக் கழகங்களும் இருக்கின்றன. 40-க்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களிருக்கின்றன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் 2000 தொடக்கம் 5000 வரை மாணவர்கள் படிக்கிறார்கள். பாடங்கள் அந்த இடத்திலிருப்பவர்கள் பேசும் மொழி மூலமும், ருஷ்ய மொழி மூலமும் கற்பிக்கப்படுகின்றன. மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் 15,000 க்கு மேற்பட்ட மாணவர்கள் 12 இலகாக்களில் படிக்கிறார்கள். நட்புறவுப் பல்கலைக் கழகத்தில் இப்பொழுது 2600 மாணவர்கள் உயர்தரக் கல்வி பயிலுகிறார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்காவிலுள்ள 82 நாடுகளிலிருந்து வந்த இளைஞர்களும் சோவியத் மாணவர்களும் நட்பு முறையிலே படிக்கின்றார்கள். பல்கலைக் கழகத்திலே நடைமுறையிலிருக்கும் கல்வி முறை, விஞ்ஞான முறையிலே அமைந்துள்ளது. பண்பாட்டைப் பொறுத்த வரையில் ஆசிய நாட்டுப் பண்பாட்டையும் ஐரோப்பிய நாட்டுப் பண்பாட்டையும் காணலாம், ஒவ்வொரு தேசிய இனத்தின் பண்பாடும் பாதுகாப்புடன் பேணி வளர்க்கப்படுகிறது. ஒவ்வொரு பிரஜைக்கும் பூரண அரசியல் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், சமயச் சுதந்திரம் இருக்கிறது. சமயம் ஒரு மனிதனின் தனிப்பட்ட விஷயமாகக் கருதப்படுகின்றது. பாடசாலைகளில் சமயம் படிப்பிக்கப்படுவதில்லை. ஆனால் மனிதன் நல்ல ஒரு பிரஜையாக வாழ்வதற்குத் தேவையான அந்தளை நல்வழிகளும் போதிக்கப்படுகிறது. ஒவ்வொரு திடகாத்திரமுள்ள பிரஜைக்கும் வேலை ஒரு கௌரவமுள்ள கடமையாகும். மற்றவர்களைச் சுரண்டி வாழ விரும்புவர்களை அங்கே சகிக்க மாட்டார்கள். சோவியத் யூனியனின் தொழில் மயம் வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டி அடித்து விட்டது. சோவியத் மக்களுக்கு சாதியென்றால் என்ன வென்றே தெரியாது. தொழிலைக் கொண்டு மக்களை அடிமைப்படுத்தும் இழிவான நிலையை சோவியத் யூனியனில் காண முடியாது. பாரதி கூறிய "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்" என்ற புது உலகத்தை அங்கே தான் காணமுடிகிறது. மனிதனை மனிதன் சுரண்டும் தன்மை வேரோடு ஒழிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

## நடமாடும் ஞானி

விளாடிமிர் கொமரோவை உங்களுக்குத் தெரியுமா? கான்ஸ்டின்பியோகிஸ்டோவை நீங்கள் கேள்விபட்டிருக்கிறீர்களா? டாக்டர் போரி எகரோவ் என்றொருவர் இருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்களா? என்ன விழிக்கிறீர்கள்? இவர்கள் மூவரைப் பற்றியும் நீங்கள் ஓரளவாகுதல் ...குறைந்தது இவர்களின் பெயர்களையாகுதல் அறிந்திருக்காவிட்டால், இந்த விஞ்ஞான யுகத்தில் வாழ்வதற்கு நீங்கள் தகுதி குறைந்தவர்கள் என்று தான் சொல்லலாம்.

***

கடந்த திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 1-00 மணிக்கு ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பிய கப்பலில், இவர்கள் மூவரும் பிரயாணம்செய்திருக்கின்றனர். இப்பொழுது விஷயம் புரிந்துவிட்டதுதானே? 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரஷ்ய விண்வெளி வீரர் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்று உலகை வலம்வந்தார். அதன் பின்னர் அதே வருடத்தில் ஆகஸ்ட் மாதத்தில் டிட்டோவ் விண்வெளி சென்றார். இதெல்லாம் பழைய கதை. ஆகையினால் புதிய விஷயத்துக்கு வருவோம்.

கடந்த திங்கட்கிழமை ரஷ்யா அனுப்பிய விண்வெளிக் கப்பலில், மேற்கூறப்பட்ட மூவரும் சுகமாகப் பிரயாணம் செய்திருக்கின்றனர். காப்டன் விளாடிமிர் கொமரோவ் விமானத்தைச் செலுத்திக்கொண்டு செல்ல விஞ்ஞானி கான்ஸ்டின் பியோகிஸ்டோவும், டாக்டர் போரி எகரோவும் 'பைலட்'டுக்குப் பின் அருகருகே அமர்ந்திருந்தனர். அவர்கள் விண்வெளிப் பயணத்துக்கான விசேஷ உடையெதுவும் அணிந்திருக்கவில்லை. டாக்டரும், விஞ்ஞானியும் சாதாரண உடை அணிந்திருந்தனர். அவர்கள் கதைத்துக்கொண்டிருந்ததையும் அப்பொழுது அவர்கள் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியையும், பல்லாயிரக் கணக்கான டெலிவிஷன் ரசிகர்கள் கண்டுகளித்தனர். இவர்கள் முக்கியமாகக் கதிரியக்கம் குறித்துத் தீவிரமாக ஆராய்ச்சிநடத்தினர். அதனுடன் கதிரியக்கச் சோதனைகளையும் கண்டனர்.

கப்பலைச் செலுத்திய கொமரோவுக்கு வயது 37. இவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. விஞ்ஞானி கான்ஸ்டினுக்கு வயது 38. டாக்டர் எகரோவுக்கு வயது 27. இவர்கள் இருவரும் திருமணம் செய்யாதவர்கள்தான். மற்றைய விண்வெளிப் பிரயாணிகளின் கப்பல்களைப் பார்க்கிலும் இவர்களின் கப்பல்தான் அதிக தூரம் சென்றிருக்கிறது. இதிலிருந்து அவர்களின் ஆராய்ச்சிகளும் எத்தகைய தன்மை வாய்ந்திருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல. இவர்கள் சுகமாகப் பிரயாணம்செய்திருக்கின்றனர், நன்றாகச் சாப்பிட்டிருக்கின்றனர், ஓரளவு நித்திரையும் செய்திருக்கின்றனர். ஆனால் இவர்கள் நடத்திய விஞ்ஞான சோதனைகள் அந்தரகசியங்களெல்லாம் பெட்டிக்குள்பூட்டப்பட்டிருக்கும் விஷப்பாம்பைப் போல், பத்திரமாகப் பாதுகாத்துவைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம், 1970-ம் ஆண்டுக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுவரைக்கும் இன்னும் எத்தனையோ ரகப் பரயாணிகள் விண்வெளிக்குச் சென்றுஉலகினை வலம்வரலாம். ஆனால்யார்முதலில்சந்திரனுக்கு செல்வார்கள் என்பதுதான் இன்னும் கேள்விக்குறியாக நிற்கிறது. ரஷ்யாவா? அமெரிக்காவா? விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை இந்த விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுக்கவேமாட்டார்கள்!

## புத்தி வந்தது

—மாஸ்டர் சிவலிங்கம்—

அன்றொரு நாள்...! நடு இரவு நேரம்... எங்கும் பயங்கர அமைதி நிலவிக்கொண்டிருந்தது. அமைதியைக் குலைத்துக்கொண்டு கொழும்பிற்கு விரைந்துகொண்டிருந்த புகைவண்டியில் பெரும்பாலும் எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். ஆனால்...! சுமார் 18 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் மட்டும் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தான்.

அவனுடைய பெயர் கோபால். கிராமப்புறத்தைச் சேர்ந்த அவன் பட்டினத்தில் ஆங்கிலக் கல்லூரியொன்றில் படித்துக் கொண்டிருந்தான். கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள வீடொன்றிலேயே தங்கியிருந்தான். நண்பர்களுடன் சேர்ந்து கும்மாளமடிப்பதிலேயே பெரும்பாலான பொழுதைக் கழித்த அவன் இம்முறை பரீட்சையில் சித்திபெறத் தவறிவிட்டான். வீட்டிற்குச் சென்றால் பரீட்சை முடிவைப் பற்றி ஏதாவது தகராறு ஏற்படலாமெனக் கற்பனை பண்ணிக்கொண்டு, எங்காவது ஓடிவிடும் எண்ணத்துடன் தந்தை அனுப்பிய 100 ரூபா பணத்துடன் புகைவண்டியில் ஏறிக்கொண்டான். சற்று நேரத்திற்கு முன்பு அவன் தூங்கிக்கொண்டிருந்த போது யாரோ பணம், டிக்கட், உடுப்புக்கள் ஆகியன இருந்த பெட்டியை அபேஸ் பண்ணி விட்டனர். அதுதான் அந்தப் பையனின் அழுகைக்குக் காரணம்.

கோபாலிருந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவில் பரட்டைத் தலையும், முரட்டு மீசையுங் கொண்ட ஒரு முரட்டு மனிதன் கோபாலையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். முரடனுடைய மனதில் உருவாகிக் கொண்டிருந்த ஏதோ ஒரு திட்டம் பூர்த்தியானதும் அவனுடைய கோர முகம் மலர்ந்தது. மெதுவாக எழுந்த அந்த முரடன் அங்கும், இங்கும் சிறிது நேரம் நோட்டமிட்டான். புகைவண்டியில் அன்று கூட்டம் குறைவாகவேயிருந்தது.

(தொடரும்)

## மூளைக்கு வேலை

சென்ற வாரம் கேட்கப்பட்ட கேள்வி, பலரின் மூளைக்கு வேலை கொடுத்திருக்கிறது. அதிகமானவர்கள் பிழையாகவே விடையெழுதியுள்ளனர். சிலர் குறுக்கெழுத்துப் போட்டியை மீண்டும் ஆரம்பிக்குமாறு கேட்டுள்ளனர். இம்முறை குறுக்கெழுத்துப் போட்டி சிறிது கடினமாகவே வெளிவருகிறது. அந்த விஷயத்துக்குச் செல்லு முன்னர் சென்ற வாரம் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியாக விடையெழுதியவர்களின் பெயர்களைக் கவனிப்போம்.

சரியான விடை: யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற புகையிரதமே யாழ்ப்பாணத்துக்குச் சமீபத்தில் நிற்கும்.

வ. தர்மராசா, தையிட்டி; க. மதியாபரணம், யாழ்ப்பாணம்; தா. வாசுதேவன், காரைநகர் வடக்கு; கே. எஸ். ராணி, உருத்திரபுரம்; க. நடராசா, வட்டுக்கோட்டை கிழக்கு; க. புனிதவதி, காரைநகர்; பொ. மல்லிகாதேவி, ஜெயந்திநகர்; வி. ஈஸ்வரிஅம்மா, காரைநகர்; சி. சிவஞானசுந்தரம், ஏழாலை; சி. துரைசிங்கம், மாதகல்; மு. ஸ்ரீரங்கநாதன், யாழ்ப்பாணம்; கீ. புவனராணி, வேரவில்; வை. ச. ஆனந்தன், காரைநகர்; ச. குமாரசாமி, கொக்குவில்; ந. சசிகுமார், யாழ்ப்பாணம்; பொ. வரதராசா, வட்டுக்கோட்டை; வ. நடராசா, வடலியடைப்பு; சி காஞ்சனா, வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

விடைகள் எழுதியவர்களில் 50 சத விகிதத்தினர்கூட, சரியாகப் பதில் அனுப்பவில்லை என்பதை உங்களுக்குத்தெரிவிக்கவிரும்புகின்றேன்.

### கேள்வி மண்டலம்

வழக்கம்போல 25 (இருபத்தைந்து) சிறிய சதுரங்களைக் கொண்ட ஒரு பெரிய நாற்சதுரத்தை வரைந்து கொள்ளுங்கள். இனி நான் சொல்லப்போகும் சதுரங்களை இடமிருந்து வலமாக அடையுங்கள்.

முதல் வரிசையில் நான்காவது சதுரம், இரண்டாவது வரிசையில் ஐந்தாவது சதுரம். மூன்றாவது வரிசையில் நான்காவது சதுரம். நான்காவது வரிசையில் எந்தச் சதுரத்தையும் அடைக்கத் தேவையில்லை. ஐந்தாவது வரிசையில் மூன்றாவது சதுரம். இப்படியாக மொத்தம் நீங்கள் நான்கு சதுரங்களை அடைக்கவேண்டும். என்ன, சரிதானே? சரி, இனி நீங்கள் சதுரங்களை நிரப்பும் வழியைக் கண்டுபிடியுங்கள்.

முதலில் இடமிருந்து வலமாக நிரப்புங்கள். முதல் வரிசையில் முதல் மூன்று சதுரங்கள்-கதியற்றவரை இப்படியும் அழைப்பார்கள். முதல் வரிசையில் கடைசியான ஐந்தாவது சதுரம்-அடுத்த மாதம் அமெரிக்காவில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் ஜனாதிபதி எத்தனையாவது அமெரிக்க ஜனாதிபதி என்பதை எழுதுக. இலக்கத்தை மட்டும் குறிப்பிட்டால் போதும். இரண்டாவது வரிசையில் இரண்டாவது சதுரம் மட்டும்—இதுவரை உலகில் அணுகுண்டுகளை வெடித்த நாடுகளில் சீனு எத்தனையாவது இடத்தைப் பிடிக்கின்றது? இலக்கத்தைக் குறிப்பிடுக. இரண்டாவது வரிசையில் நான்காவது சதுரம்-விண்வெளிக்கு ரஷ்யா முதன்முதல் தனது பிரயாணியை அனுப்பிய வருடம். (வருடத்தைக் குறிப்பிடுக) மூன்றாவது வரிசையில் முதல் மூன்று சதுரங்கள் யுத்தம் நடைபெறும் இடம், யுத்த — நான்காவது வரிசையில் ஐந்து சதுரங்கள்—தலைவியை இப்படியும் அழைக்கலாம். ஐந்தாவது வரிசையில் முதலிரு சதுரங்கள்—ஆகாயத்தைக் குறிக்கும் வேறு ஒரு வார்த்தை. இந்த வார்த்தை தலைகீழாக இருக்கிறது. ஐந்தாவது வரிசையில் கடைசி இரு சதுரங்கள்—பாரத்தைக் குறிக்கிறது.

மேலிருந்து கீழாக நிரப்புங்கள்: முதல் வரிசையில் ஐந்து சதுரங்கள்—வாலியின் மைந்தன். இரண்டாவது வரிசை நிரப்பத்தேவையில்லை. மூன்றாவது வரிசையில் முதல் நான்கு சதுரங்கள்—நண்பகலைக் குறிக்கிறது. இந்த வார்த்தை மாறுபட்டுக்கிடக்கிறது. நான்காவது வரிசையில் கடைசி இரண்டு சதுரங்கள்—இரவுக்கு எதிரான இந்த வார்த்தையில் ஒரு எழுத்து குறைகிறது. ஐந்தாவது வரிசையில் கடைசி மூன்று சதுரங்கள்—நவதானியங்களில் ஒன்று.

உங்கள் மூளையை நன்றாகச் செலவழித்து சரியான விடைகளைக் கண்டுபிடித்து, தபாலட்டையில் அனுப்பிவையுங்கள். உங்களின் வசதிக்காக போட்டியின் முடிவை இருவாரத்துக்கு நீடித்துள்ளேன். உங்களின் விடைகளை இம்மாதம் 31-ம் திகதி சனிக்கிழமைக்கு (31-10-64) முன்னதாக மாணவர் மலர், 'ஈழநாடு', த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்,

—சாந்தா

எந்நேரத்திலும் எப்பொழுதும் மகிழ்ச்சி ஊட்டும் பிராங்கோ சாக்கலேட்டுகளைச் சுவைக்கலாம்.
சுவிட்சர்லாந்தின் உயர்ந்த தரத்திற்கேற்ப தெரிவு செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பிராங்கோ சாக்கலேட்டுக்கள் இப்பொழுது காற்றுப்புகாதவண்ணம் அடைக்கப்பட்டு புதுமையுடனும் எழிலுடனும் மிளிருகிறது.
எனவே
எல்லோரும் இலங்கையில் சிறந்த பிராங்கோ சாக்கலேட்டுக்களை விரும்புகிறார்கள் என்பதில் ஆச்சர்யம் எதுவுமில்லை
இன்றே
பிராங்கோ சாக்கலேட்டுகளை சுவைத்துப்பாருங்கள்.
இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடிய பிராங்கோ சாக்கலேட்டுக்களைச் சுவையுங்கள்.
ஈ. பிரான்சிஸ் பெரரா அன்கோ.,
10-12, யரின் நுவர வீதியா, கண்டி. தொலைபேசி: கண்டி 590
கொழும்பு காரியாலயம்: 234, மெசன்சர் தெரு, கொழும்பு-12 தொலைபேசி: 7565

## வான்மோதி மரணமானர்

யாழ்ப்பாணம், திங்கள்
வேலணையைச் சேர்ந்த நாகமுத்து கந்தையா (65) இயக்கச்சி என்ற இடத்தில் வான் ஒன்றினுல் மோதப்பட்டு பளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே மரணமானர். வானின் கிளீனர் பொன்னையா கந்தசாமி சாட்சியளிக்கையில் தாங்கள் வானில் வரும் பொழுது ஒருவர் தள்ளாடி தள்ளாடி பாதையில் முன் சென்றதாகவும் அதற்குள் வான் மோதி கொண்டதாகவும் பின்னர் தாங்கள் அவரை பளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் கூறினர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் வான் சாரதியை 500 ரூபா பிணையில் விட்டு 26-ம் திகதி அக்டோபர் மாதம் சாவகச்சேரிக் கோர்ட்டில் ஆஜர் ஆகும் படியும் பொலிஸாரை தொடர்ந்து விசாரணை நடாத்தும் படியும் உத்தரவிட்டார்.

## இந்தோனேஷிய அதிகாரிக்கு தூக்கு

கோலாலம்பூர், அக். 19
இந்தோனேஷிய இராணுவ அதிகாரியொருவருக்கு இங்குள்ள நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Silvana Mangano
IN
BITTER RICE
From Friday 23rd Hercules

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 4 5
6-30 காட்சி மாத்திரம்
சம்பூர்ண
மகாபாரதம்
இரவு 9-30 மாத்திரம்
பியா மிலன் கி யாஸ்
(ஹிந்தி)
PIYA MILAN KI AAS

## வானெலி நிகழ்ச்சிகள்

**செவ்வாய் 20-10-64**

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசமயசிந்தனை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீ லங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 விவேகச்சக்கரம், 8-00 முன் விம்பிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம் — ஏ. கணபதி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை. 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 இசைக்தம்பம், 7-45 ரேடியோ செய்தி மலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 2-40 பொன்னெளிர் பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 பாட்டு — ஈ. எஸ். ஸ்ரீகண்டன், 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாம் ஒருவர் — சித்திரம், 9-15 மெல்லிசை, 10-00 ஒலிமலர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

மங்களகரமான 4வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
குயின்லன் (நுகேகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (சீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்

உதை பந்தாட்டம்

# யாழ்ப்பாணத்திடம் கம்பஹா தோல்வி

யாழ்ப்பாணம், செவ்.
கம்பஹா கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் கோஷ்டிக்குமிடையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டி அகில இலங்கை உதைபந்தாட்ட வெள்ளிக் கிண்ணத்துக்காக முதலாவது பிரிவில் இரண்டாவதாக நடைபெற்றது. கம்பஹாவில் நடைபெற்ற முதல் போட்டியிலும் யாழ்ப்பாணம் கோஷ்டியே வெற்றியீட்டியதுஎன்பது குறிப்பிடத் தக்கது.

உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமான சில நிமிடங்களுக்குள்ளாக கம்பஹா கோஷ்டி ஒரு கோல் போட்டது, ஆட்டத்தின் விறுவிறுப்பை அதிகரித்தது. யாழ்ப்பாணம் கோஷ்டி திறமையாக விளையாடியபொழுதிலும் இடைவேளைக்கு முன்னர் கோல் எதுவும் போடவில்லை. இடைவேளைக்குப் பின்னர், கம்பஹா கோஷ்டியினர் சிறிது களைத்துப் போனவர்களாகக் காணப்பட்டனர். இதனை நன்கு பயன்படுத்த நினைத்த யாழ்ப்பாணம் கோஷ்டியினர் மளமளவென்று நான்கு கோல்களைப் போட்டனர். யாழ். கோஷ்டியின் இந்த ஆபார விளையாட்டு, ரசிகர்களுக்கு பெரும் உற்சாகத்தை அளித்திருந்தது. யாழ்ப்பாணம் கோஷ்டியை சேர்ந்த இரத்தினசிங்கம், கணேசலிங்கம், தேவராசா, கனியூட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல் போட்டிருந்தனர். ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

இப் போட்டிக்கு திரு. சண்முகராசா மத்தியஸ்தம் வகித்தார்.

# கல்வி வெள்ளையறிக்கை பற்றி கமிஷன் தலைவர் கண்டனம்

கொழும்பு, திங்கள்
"கல்விக் கமிஷனின் சிபார்சு செய்த அடிப்படையில் வெள்ளையறிக்கை தயாரிக்கப்படவில்லை. கல்வி இலாகாவில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணப்படியே வெள்ளை அறிக்கைவரையப்பட்டுள்ளது. ஆகவே இதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல" என்று கல்விப்பேராசிரியரும், கல்விக் கமிஷன் தலைவருமான டாக்டர் ஜே. ஈ. ஜெயசூரியா கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

வெள்ளை அறிக்கையிலுள்ள குறைபாடுகள் பற்றி கல்வி மந்திரிக்கு அறிவிக்கவேண்டும் என்றதன் பேரில் ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்புவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் ஜெயசூரியா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையில் இரண்டு அல்லது மூன்று பிரதான நகரங்களில் தமிழ் மொழி போதனமொழியாகவிருக்கின்றது, ஆனல் யாழ்ப்பாணத்தில் ஒரு திறமையான சிங்களப் பள்ளிக்கூடம் சிங்களப்பிள்ளைகளுக்கு சிங்களம் மூலம் கல்வி கற்பிப்பதற்கு இல்லை. இதனுல் சிங்களப்பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், பெரிய பள்ளிக்கூடங்களில் சிங்களத்திலும் தமிழிலும்கல்வி கற்பித்தால் அதனுல் தமிழர்-சிங்களவர் ஐக்கியத்தை நாங்கள் மிகவும் வலுப்படுத்தலாம். எந்த நாட்டிலும் வெள்ளை அறிக்கை ஒரு கமிஷன் செய்த சிபார்சுகளில் இருந்தே தயாரிக்கின்ருர்கள். ஆனல் இங்கே அப்படி நடக்கவில்லை. சிலர் தாங்கள் விரும்பியபடி செய்துவிட்டு பிரதம மந்திரியின் கட்டளைப்படி செய்திருக்கின்ருேம் என்று கூறுகின்றனர்.

## லொறி மோதி மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்
கோப்பாய்-கைதடி ரோட்டில் இணுவிலைச் சேர்ந்த எஸ். எம். மொகமட்அலி (40) லொறி ஒன்றினுல் மோதப்பட்டு மரணமானர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் லொறிச்சாரதி டி. ஆர். ஜெயசேனவை 26-ம் திகதி அக்டோபர் மாதம் சாவகச்சேரிக் கோர்ட்டில் ஆஜர் ஆகும்படியும், பொலிசாரை தொடர்ந்து விசாரணை நடத்தும்படியும் உத்தரவிட்டார். லொறிச்சாரதி ரூபா 1000 பிணையில் விடப்பட்டார்.

## டிராக்டரில் சிக்குண்டு சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்
குமாரபுரத்தைச் சேர்ந்த பெருமாள் ஈஸ்வரன் (9) டிராக்டர் ஒன்றினுல் மோதப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானர். இறந்தவரின் தகப்பனரான திரு. கே. பெருமாள் திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் சாட்சியம் கொடுத்தபொழுது கூறியதாவது: "டிராக்டரைத் திருத்துவதற்காக கராச்சுக்குக் கொண்டுசென்று அங்கே சிறிது றிவேர்ஸ் எடுத்தபொழுது ஈஸ்வரன் டிராக்டருக்குள் பின்னப்பட்டு அறிவிழுந்து காணப்பட்டார்."

விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

## ஹொங்கொங் செல்லும் ஸி. ஐ. டி. கோஷ்டி

கொழும்பு, திங்கள்
பத்துக் கோடி இரத்தினம் இலங்கையிலிருந்து ஹொங்கொங்கிற்கு கடத்தல் செய்யப்பட்ட மோசடியையிட்டு ஸி. ஐ. டி. விசாரணை செய்வதற்காக திறமை மிகுந்த ஒரு குழுவினரை ஹொங்கொங்கிற்கு செல்லும் எனத் தெரிய வருகிறன்றது.

## சந்திரகும்பத் திருவிழா

யாழ்ப்பாணம், செவ்.
கொழும்புத்துறை மன்றாடும் வதிரிபீட விநாயகர் கோயில் சந்திர கும்பத்திருவிழா இன்று மாலை நடைபெறும். அம்பாளுக்கு விசேட ஸ்நபனபிஷேகமும் பூசையும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

திரு. வி.எஸ்.எஸ். மணிபாகவதரின் கதாப்பிரசங்கமும் திரு. எஸ். கணேசசுந்தரனின், "பக்தநந்தனர்" வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் திருவிழாவில் இடம்பெறும். நாதஸ்வரக் கச்சேரிகரகம் ஆகியனவும் நடைபெறும்.

## வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினுல் சிபார்சு செய்த கண்ணடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

**தொய்வு, நீரிழிவு**
குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலைக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**வாடகைக்கு**
டிஸ்பென்சறி, சுருட்டுக் கடை, பைசிக்கிள் ஷொப் முதலியவைகளுக்குரிய இடம் பஸ் நிலையத்திற்கு அருகில் வாடகைக்கு விடப்படும். குகன் ஸ்ரோர்ஸ், 63, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் விசாரிக்கவும். 1034

**சிங்களம்**
ஆறுமாதத்தில் தபால்மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். இலவச விபரங்களுக்கு இன்றே விண்ணப்பிக்கவும். ஏ. பி. டானியல், வாடிவீட்டுத் தெரு, மாகோ. 1037

**அறிவித்தல்**
புங்குடுதீவு மேற்கு 5-ஆம் வட்டார வாசியும் தீவுப்பகுதி பால் விநியோக மேற்பார்வையாளரும் சப்ததீவு இந்துமகா சபை கௌரவ காரியதரிசியுமான திரு. விசுவலிங்கம் கார்த்திகேசு அவர்கள் அறிவற்ற நிலையில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்பொழுது பூரண குணமடைந்து வருகிருரென்பதை இனபந்துகட்கும் நண்பர்கட்கும் அனுதாபிகட்கும் இதன்மூலம் அறியத்தருகின்ருேம்.
கலைவாணி அச்சகம்,
950 யாழ்ப்பாணம்.

**தேவை**
எமது ஊதுபத்தி தொழிற்சாலையில், பத்திகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள பெண்களும், பெண்பிள்ளைகளும் வேலைக்குத் தேவை.
வேலையில் ஊக்கமுள்ளவர்களும், நல்லொழுக்கமுடையவர்களும்மாத்திரம் நேரில் விண்ணப்பிக்கவும்.
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1028

## "மக்களே தீர்மானிப்பர்"

பேராதனை, திங்கள்
"நான் சபாநாயகர்கொடுத்த தீர்ப்பைப்பற்றிக் குறைகூறவில்லை. அதை மக்களே தீர்மானித்துக் கொள்ளலாம். இந்த அகில உலகத்திலும் இலங்கையிலுள்ள பத்திரிகைகளைப் போன்று கேவலமான பத்திரிகைகளை நான் காணவில்லை. நானும் பிறர்போன்று ஒரு பௌத்தன் தான். அத்துடன் பௌத்த பெற்ருேர்க்கே பிறந்தேன். ஆனல் நான் எந்த புத்தசாமியினுடைய அங்கியையாகுதல் பிடித்து இழுக்கவில்லை" என்று டாக்டர் என். எம். பெரேரா உடுதுவர என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

**கோர ரயில் விபத்து:**

# மாண்டவர் தொகை 25-ஆக அதிகரிப்பு

## சிலரின் சடலங்கள் இன்னும் அடையாளம் கண்டுபிடிக்கப் படவில்லை

கொழும்பு, திங்கள் கடந்த சனிக்கிழமை மீரிகாமத்துக்கும் அம்பேபுஸாவுக்குமிடையே ஏற்பட்ட பயங்கர ரயில் விபத்தில், இன்று காலை கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் காலமான ஒருவருடன் மொத்தம் 25 பேர் மாண்டனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மீரிகாம ஆஸ்பத்திரியிலிருந்து ஐந்து இனம் தெரியாத சடலங்கள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டன. இவர்கள் சட்டவிரோதமாக இலங்கையில் குடியேறியவர்களாகவிருக்கலாம் எனச்சந்தேகிக்கப்படுகிறது. சிலரின் சடலங்கள் கொழும்பு பொலிஸ்நிலைய பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

ரயில்விபத்தில்காயமடைந்து தற்பொழுது மீரிகாமம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் சிலரின் பெயர்கள் வருமாறு:-

டி. பி. குருஸ், பேசாலை; எஸ். செய்யது, எருக்கலம்பிட்டி; எல். பற்றிக் பெரேரா, பருத்தித்துறை; எம். அரங்கானந்தம், மணடைதீவு; ஜே. ஏ. சிமியோன், மன்னர் பொலிஸ் நிலையம், கதிரவேலு,மன்னர்; எஸ். ஹமீட், குருநாக்கலை; சுப்பையா செல்வராசா, மனனர்; செவகியன் ராணி, பேசாலை; வி. செல்வம், மன்னர்.

கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்கள் வருமாறு: ரி. ஜோசைப்பிள்ளை, காங்கேசன் துறை; எம். சி.எம். யாசிம், வெலிகாமம்; ஈ. செல்லையா, செட்டிகுளம்;எஸ். துரைராஜா, கொட்டாஞ்சேனை; முகம்மது சாலி, எருக்கலம்பிட்டி; ஏ. வி. சாமுவேல், ம்புக்கண்; கே. எஸ். ஏ. காதர், எருக்கலம்பிட்டி; ரி. அடைக்கலம், நச்சிக்குளம்; பொன்னுத்துரை, வெற்றிக்குளம்; பி. கருப்பையா, மன்னர்; ஆறுமுகம், பொல்காவலை; டி. ஜோதிநாதன், பொல்காவலை; எஸ். நவரத்தினம், கல்லடி; எஸ். அந்தோனி, பேசாலை; பி. காளிமுத்து, மன்னர்; ஏ. எம். அப்துல்கனி, கொழும்பு; ஆரோக்கியநாதன்.

**வடபகுதி அசைஸ் விசாரணை**

# கைதடி கொலை வழக்கில் எதிரி விடுதலை

## சாட்சிக்கு மூன்றுமாதம் கடுங்காவல்

யாழ்ப்பாணம், திங்கள் கைதடி கொலைவழக்கு இன்று காலை 2-ம் முறையாக புதிய ஜூரிசபை முன்னர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 'சாட்சியம் திருப்திகரமாக இல்லாதபடியால் எதிரி குற்றவாளியல்ல' என்று ஜூரிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில் முக்கிய சாட்சியெனக் கருதப்பட்ட வேலன் பொன்னன் பொய் சாட்சியம் கூறியதற்காக அவருக்கு 3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தனது சகோதரனின் மகனை கைதடியைச் சேர்ந்த சின்னத்தம்பிசெல்லன் (குண்டுமணி) என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த வேலன் கதிரன் (உடையான்) கடந்த வருடம் ஜூன் மாதம் 14-ம் திகதி கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டி வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்று காலை 2-வது முறையாக நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முதல்முறையாக இவ்வழக்கு கடந்தவாரம் இதே நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இடையில் முடிக்குரியவழக்கறிஞர் திரு. ஆர். ஐ. ஒபயசேகரா சுகவீனமடைந்ததன் காரணமாக நீதியரசர் வழக்கை மீண்டும் முதலிலிருந்தே நடத்தப்போவதாகக் கூறி முதல்முறையாக விசாரித்த ஜூரர்கள் முன்னிலையிலில்லாது, புதிய ஜூரர்கள் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்படுமென்றும் தெரிவித்திருந்தார்.

### வழக்கறிஞர்கள்

எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா, திரு. ஈ.ரி.ஜே. பிறிட்டோவின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக திரு. ஜே. எம். லைமன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஜூரர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட போது, திரு. சி. சுப்பையா என்ற ஜூரிசபையிலிருந்த ஒருவர் சத்தியப்பிரமாணத்தை ஆங்கிலத்தில் சொல்லமுடியாது திக்குமுக்காடியதைக் கவனித்த நீதியரசர் அவரை ஜூரிசபையிலிருந்து விலகும்படி உத்தரவிட்டார்.

### ஆங்கிலம் தெரியாது!

காலியாக இருந்த அந்த இடத்தை நிரப்புவதற்காக புதிதாக ஒருவர் அழைக்கப்பட்டார். அவர் தனக்கு ஆங்கிலம் சரிவரத் தெரியாது என்று கூறவே அவரையும் ஜூரிசபையிலிருந்து விலக்கும்படி உத்தரவிட்டார்.

## தாமதித்த விமான தபால்

யாழ்ப்பாணம், செவ். இம்மாதம் 12-ம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திலிருக்கும் திரு. கே. சாந்தலிங்கம் என்பவருக்கு அனுப்பப்பட்ட விமானத் தபால் ஒன்று யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோருக்கு 13-ம் திகதி வந்தடைந்ததாகவும் யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரிலிருந்து விலாசதாரருக்கு பதினேழாம் திகதிதான் கொடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இருமாதத்துக்குள் 25 பஸ்கள்

### யாழ்ப்பாணம் வருமென மந்திரி உறுதி

யாழ்ப்பாணம், செவ்வாய் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க யாழ் பிரதேசக் கிளையின் சார்பில் தோழர்கள்: நாகராசா, கதிர்காமலிங்கம், வி. பாலசிங்கம், அ. விஸ்வநாதன் ஆகியோர் போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்காவை நேற்று முன்தினம் சந்தித்து யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து சீர்கேட்டைப் பற்றியும் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் மந்திரியைக் கேட்டுக் கொண்டனர்.

ஒன்பது இரட்டைத்தட்டு பஸ்களை உடன் அனுப்புவதாகவும், மேலும் 25 சாதாரண பஸ்களை இரண்டு மாதங்களுக்குள் அனுப்புவதாகவும், உறுதியளித்த போக்குவரத்து மந்திரி தாம் யாழ்ப்பாணம் வந்த பொழுது போக்குவரத்து சீர்கேட்டை நேரில் கண்டதாகவும் தெரிவித்தார்.

## சரஸ்வதி பூசை

யாழ்ப்பாணம், செவ்வாய் எழுவைதீவு முருகவேள் வித்தியாசாலையில் விஜயதசமி அன்று அதி விமரிசையாக சரஸ்வதி பூசை நடைபெற்றது. மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. மேற்படி பூசையை திரு. க. குமரகுரு தலைமை ஆசிரியர் நடாத்திவைத்தார்.

## காயங்களுடன் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னின் வீட்டிற்குள்ளிருந்து ஓடினார்கள். நான் வீட்டிற்குள் போனபோது, இரத்தக்காயங்களுடன் அண்ணன் பேச்சுமூச்சின்றிக்கிடந்தார்.

நான் குளறினேன், அண்ணனுடன் கதைக்கத் தெண்டிக்கவில்லை. அதன்பின் என் கணவனுக்கு சொல்லப்போனேன். அண்ணனின் பிள்ளைகள் எனது வீட்டிலிருந்தார்கள், அவர்களை எனது கணவனுடன் பொலிஸுக்கு அனுப்பினேன்.

எதிரிகளின் வழக்கறிஞர்கள் திரு. ஈ. பி. சத்துருகுலசிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: நீர் பொலிஸுக்கு எத்தனை மணிக்கு வாக்குமூலமளித்தீர்? - இரவு 8 மணிக்கு. இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு வந்தார். அவரிடம் வாக்குமூலமளித்தேன்.

வழ: கொலைபற்றி அன்றிரவு 8-45 மணிவரை இன்ஸ்பெக்டருக்கோ பொலிஸாருக்கோ தெரியாது. அப்படியிருக்கும் பொழுது, இரவு 8 மணிக்கு இன்ஸ்பெக்டரிடம் எப்படி வாக்குமூலமளித்தீர்? - எனக்கு நேரம்தெரியாது.

வழ:கணபதியைத்தெரியுமா? -தெரியும்.

வழ: அவர் வயது போனவரா? - நான் அவரிடம் வயதைக்கேட்கவில்லை.

வழ: அவர் எப்படிப் பட்டவர்? - எனக்குத் தெரியாது. நான் காணவில்லை.

இந்நிலையில் கணபதி நீதிமன்றத்திற்குள் அழைக்கப்பட்டார். சாட்சி அவரைப்பார்த்த பின் தனக்கு கணபதியைத் தெரியுமெனக்கூறினர்

## திருத்தம்

இம்மாதம் 19-ம் திகதிய "ஈழநாடு" இதழில் குறிப்பிட்டதுபோல யாழ். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா அகில இலங்கைத் தமிழர் பௌத்த சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவிற்குத் தலைமை தாங்க மாட்டாரென்றும் தனக்கும்இந்தக்கூட்டத்திற்கும் ஒருசம்பந்தமும் கிடையாதென்றும் தெரிவித்துள்ளார். தவறுக்கு வருந்துகின்றோம்.

## சைவ மாமன்றம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மூட முயற்சி செய்தபொழுது அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் பெரும் முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டதைத் தாங்களும் அறிவீர்கள். ஆதலால் இந்த விஷயத்தில் மத, இன வேறுபாடின்றி பாடசாலையை மூடவிடாது தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்".

## எல்லாக் கல்லூரி . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போது குறிப்பிட்டார்.

கோண்டாவில் சந்தியிலிருந்து வித்தியாதிபதி, வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

திரு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற விழாவில் வித்தியாதிபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"இப்போது இருப்பதுபோ லில்லாது எல்லாப் பாடசாலைகளிலு ஒரேமாதிரியான புத்தகங்களையே ஒரு வகுப்புக்குப் படிப்பிக்கக்கூடிய முறையும், ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரேமாதிரியான விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் பயிற்றக்கூடிய திட்டத்தையும் நடைமுறையில்கொண்டுவர இருக்கிறோம். இதனால் எல்லாப் பாடசாலைகளிலும் ஒரேமாதிரியான கல்வியையே மாணவர்கள் பெறக்கூடியதாகவிருக்கும்.

### பாடசாலைகள் புனரமைப்பு

பாடசாலைகளை தகுதிக்கேற்பவும், வசதிக்கேற்பவும், திறமைக்கேற்பவும் புனரமைப்பு செய்யவிருக்கிறோம். ஒரே பாடசாலையில் உயர்தர வகுப்புகளையும், ஆரம்ப வகுப்புகளையும் ஒன்றாக வைத்திருக்கமாட்டோம். எந்த ஒரு கல்லூரியில் விஞ்ஞானகூடங்கள், இன்னும் தேவையான வசதிகள் உயர்தர வகுப்பு வைப்பதற்கு வசதியாக விருக்கின்றனவோ அக் கல்லூரியை உயர்தர வகுப்பு வைக்கும் கல்லூரியாக மாற்றுவோம். அங்கு ஆரம்பபிரிவுகள் இப்போது இருப்பதுபோல் இருக்கமாட்டாது. வேறு சில கல்லூரிகள் உயர்தர வகுப்புகள் வைப்பதற்கு வசதியற்றதாகவிருக்கும். அக் கல்லூரிகளை ஆரம்ப பிரிவு வகுப்புகள் வைக்கும் கல்லூரியாக மாற்றுவோம்.

### கல்வித் திட்டம்

ஒரு பிள்ளையின் 14 வது வயதில் அப் பிள்ளை எந்த விதமான கல்விக்கு ஏற்றதென்பதைத் தெரிந்துகொண்டுவிடலாம். தொழிற் கல்விக்கோ, விஞ்ஞானக் கல்விக்கோ ஏற்ற தென்பதைத் தெரிந்து அத்துறையில் அக் குழந்தைக்குப் பயிற்சி கொடுக்கலாம். புத்தியில்லாத 'மக்கு'ப் பிள்ளை என்று ... 'ருமில்லை' கணிதக் கல்வி ஒரு பிள்ளைக்கு சூனியமாக இருக்கலாம். அந்தப் பிள்ளைக்குத் தொழிற் கல்வியில் சிரத்தை இருக்கும். எனவே பிள்ளைகளுக்கு ஏற்றதொரு கல்வித் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

### ஏழை—பணக்காரர் வித்தியாசமில்லை

முன்னர் ஒருகாலத்தில் பணக்காரர் மட்டும் படிக்கக்கூடிய ஒரு வசதி இந்நாட்டில் இருந்துவந்தது. இப்போது ஏழைபணக்காரர் என்றபேதமின்றி எல்லாப்பிள்ளைகளும் ஒரேமாதிரியான கல்வியைப் பெறக்கூடிய வசதியை நாம் செய்திருக்கிறோம்."

கோண்டாவில் கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. எஸ். இரத்தினசிங்கம் தமது வரவேற்புரையில் கூறியதாவது:-

"எமது பகுதியிலிருந்து 500-க்கு மேற்பட்ட மாணவர்கள் வெளி இடங்களுக்கு மேற்படிப்புப் படிப்பதற்காச் செல்லுகின்றனர். இதற்குக் காரணம் எமது ஊரில் உயர்தரக் கல்வி கற்பதற்கு ஏற்ற ஒரு வசதியுள்ள ஒரு கல்லூரி இல்லாததே. இதனால்தான் கிராமத்து மக்களாகிய நாம் பணம் சேர்த்து இந்த விஞ்ஞானகூடத்தை அமைத்தோம். எமது கல்லூரிக்கு வேண்டிய இன்னும் தேவையான வசதிகளையும் செய்துதரவேண்டும் என வித்தியாதிபதியைக் கேட்டுக் கொள்கிறோம்."

**விற்பனைக்கு**

சொந்த ... ரலி பைசிக்கிள் ஒன்று விற்பனைக்குண்டு. 21-10-64 புதன் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நேரில் பார்வையிடலாம்.

விலாசம்: 20, வைமன்ரோட், யாழ்ப்பாணம். 1059

○ 12 வருடங்களாக தென்மராட்சி மக்களுக்கு சிறந்த முறையில் சேவை புரிந்த ஒரே ஒரு ஸ்ருடியோ! அதுதான்

**குகன்ஸ் ஸ்ருடியோ**

சாவகச்சேரி.

ஒருமுறை விஜயம் செய்து திருப்தியடையுங்கள். 1088

## மரண விசாரணை அதிகாரி நியமனம்



மல்லாகத்தைச் சேர்ந்த திரு அ. சி. தாமோதரம் பிள்ளை மல்லாகம் உடுவில் கோவில்பற்று மரணவிசாரணை அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். இவர் கடந்த 28 வருடங்களாக மல்லாகம் கிராம அதிகாரியாகக் கடமையாற்றியவர். 48 வயதான இவர் முறைப்படி சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியை ஏற்றுக்கொண்டார்.

## இறுதி தேரிவில் விளையாட இந்தியா தகுதி

டோக்கியோ, அக். 19 டோக்கியோ ஒலிம்பிக் விழாவில் நடைபெறும் ஹாக்கிப் போட்டியில் இறுதித்தெரிவில் விளையாட இந்தியா இன்று தகுதிபெற்றது. ஹாக்கிப் போட்டியின் "ஏ" பிரிவில் பாகிஸ்தான், ஆஸ்திரேலியாவும், "பி" பிரிவில் இந்தியா, ஸ்பெயினும் விளையாடும். புதன்கிழமையன்று இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே போட்டி நடைபெறும்.

இன்று இந்தியாவுக்கும் நெதர்லாந்துக்குமிடையேநடைபெற்ற ஹாக்கிப்போட்டியில் இந்தியா (2-1) வெற்றியீட்டியது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964- ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.